# தமிழ் வளர்ச்சியில் சைவத்தின் பங்கு

**பிரியங்கா. தி**
**தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,**
**அரசுக் கல்லூரி, சித்தூர் – 678104. priyankapriyactr@gmail.com**

**10**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் மொழியின் வளமும் வளர்ச்சியும் சமயங்கள் சார்ந்தனவாகவே உள்ளன. பழமை வாய்ந்த இலக்கியமாம் சங்க இலக்கியங்கள் மட்டும் சமய கொள்கைகளுக்கு இடம் கொடுக்காமல் அகம், புறம் என்ற மக்கள் வாழ்க்கை முறையினை ஒட்டி எழுந்துள்ளது. அதையடுத்து காப்பிய காலம் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை தோன்றிய பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள் புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகை இலக்கியங்களும் சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இஸ்லாம், கிறித்துவம் போன்ற சமயங்களைத் தழுவியே எழுந்துள்ளன. சமயப் பெரியோர்கள் இறைவனிடம் கொண்ட பக்தி நெறியை வெளிப்படுத்துவதற்கு இலக்கியங்களைக் கருவியாகக் கையாண்டனர். அதன் மூலம் சமயங்களும் வளர்ந்தது; தமிழும் வளர்ந்தது. இத்தகைய தமிழ் வளர்ச்சியில், சைவ சமயத்தைச் சார்ந்த சைவ அடியார்களின் பங்கும் அளப்பரியது. இசை பாடியும், புதிய இலக்கிய வகைகளை அறிமுகப்படுத்தியும், சைவ மடங்களை நிறுவியும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வழிவகுத்தனர். இவர்களால் சைவ சமயமும், தமிழ்மொழியும் அதன் உச்சநிலையை அடைந்தது என்றே கூறலாம். சிவபெருமானையும் தமிழையும் ஒன்றென்றனர் சைவர்கள். அவர்களது இக்கொள்கையை அவர்கள் அருளிச் செய்த பதிகங்களும், இலக்கியங்களும் நிறுவுகின்றன. ஆகவே அவற்றையெல்லாம் ஆராய்ந்து தமிழ் வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்களிப்பு எந்த அளவிற்கு அமைந்துள்ளது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**கலைச் சொற்கள்:** சமயம், சைவ சமயம், சைவர்கள், சைவ மடங்கள், சமயப்பெரியோர்கள், சிவபெருமான், பக்தி நெறி

**முன்னுரை**

நின்று நிலைத்து நித்தமும் புதுமை புரியும் சைவம் வளர்த்த துறைகள் பல. மொழி, சமயம், தத்துவம், இலக்கியம், வரலாறு, பண்பாடு, மனித வாழ்வியல், நுண்கலைகள் என்கிற பல்வேறுபட்ட துறைகளில் சைவம் தன் முத்திரையைப் பதித்துள்ளது. குறிப்பாகத், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு சைவ சமயத்தின் பங்களிப்பு அளப்பரியது. தமிழும் சைவமும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத பொருள்கள். தமிழால் சைவம் வளர்ந்தது என்றோ, சைவத்தால் தமிழ் வளர்ந்தது என்றோ பிரித்துப் பேச முடியாது. இரண்டுமே ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. காலத்தை வென்று ஞாலத்தில் நிலைத்திருப்பவை. சைவம் சிவமோடு தொடர்புடையது. சிவம் தமிழோடு தொடர்புடையது. சிவம் வேறு, தமிழ் வேறு அல்ல. தமிழே சிவம், சிவமே தமிழ். அதனாலேயே சிவபரம் பொருள் முத்தமிழ்

வடிவமாகக் காட்சியளிக்கிறது. பண்டைய காலத்தில் தமிழ் இலக்கியங்களின் வாயிலாக சைவ சமயத்தின் இறையுணர்வும், சமயக்கோட்பாடுகளும், தத்துவ நெறிகளும் வலியுறுதப்பட்டன. முத்தமிழ் கூறுகளான இயல், இசை, நாடகம் ஆகியவற்றுடன் சைவமும் கலந்து கொண்டது. அங்ஙனம் சிவமாகிய தேனைத் தமிழாகிய கூட்டினுள் வைத்து இரண்டையும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்றனர் சைவப் பெருமக்கள்.

**சைவத்தின் தொன்மை**

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாக விளங்கும் சைவம் என்று தோன்றியது எனக் கூற இயலாது. சிந்து சமவெளியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட சிவலிங்கங்கள் சைவத்தின் பழமையினையும், பெருமையினையும் பறைசாற்றுகின்றன. சைவத்தின் முதல்வன் சிவன். சிவனை இடையறாது எண்ணி எண்ணி உள்ளம் உருகும் செந்நெறியே சைவ சமயம் ஆகும்.

> "சங்க இலக்கியங்களில் சிவபெருமானை குறித்த பெயர்கள் காணப்படுகின்றன. முக்கட் செல்வன், கறை மிடற்றண்ணல், நீலமணி மிடற்றண்ணல், நீலமேணி வாலிழை பாகத்தொருவன், ஆலமர் செல்வன் என்பவை அவற்றுட் சில. சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரை காஞ்சி ஆகிய நூல்களில் சிவபெருமானைப் பற்றிய குறிப்பு வருகிறது" (சைவம் வளர்த்த தமிழ், ப.8),

என்ற பாரதி ரமேஷின் கருத்து சைவத்தின் தொன்மையைப் புலப்படுதுகின்றன.

சைவ சமயம் விரிந்து பரந்த பெருநோக்குடையது; உலகளாவிய சமயமாய்த் திகழ்வது; எந்த ஒரு சமயத்தையும் இகழாமல் எல்லாவற்றையும் தழுவி நிற்கும் தன்மை கொண்டது. 'சைவ சமயமே சமயம்' என்று தொடங்கும் தாயுமானவரின் தமிழ்ப்பாடல் சைவ சமயத்தின் மாண்பை உலகெங்கும் பறைசாற்றும்.

**சைவம் வளர்த்த தமிழ்**

தமிழைச் சைவம் எவ்வாறு வளர்த்தது என்று எண்ணுவதே இனிமை தருவதாகும். தமிழ், இறைமொழி; இறைவன் உகக்கும் மொழி. பிற மொழிகளைப் போல் வாணிக மொழியாகவோ, அறிவியல் மொழியாகவோ, சட்ட மொழியாகவோ, இலக்கிய மொழியாகவோ மட்டும் அல்லாமல் இறையுணர்வு மொழியாகவும் விளங்குகின்றது. இயற்றமிழை இறைத்தமிழ் ஆக்கிய பெருமை சைவத்திற்கே உண்டெனில் அது மிகையில்லை.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சைவ நெறிக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது எனக் கூறலாம். காரணம், இந்தக் காலத்தில்தான் இறைவனின் தூதர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நால்வர்கள் தோன்றிக் காலத்திற்கும் அழியாத அரிய செயல்களை செய்தனர். இவர்களால் சைவமும் வளர்ந்தது; தமிழும் வளர்ந்தது.

**திருமுறைகள் வளர்த்த தமிழ்**

தமிழின் இசை வளத்திற்க்குத் திருமுறைப் பாடல்கள் சான்றாக உள்ளன. பல்லவர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த, சமண சமயங்களை எதிர்த்து மக்களைத் திரட்டுவதற்குக் கலை

நயத்துடன் கூடிய பக்திப் பாடல்கள் தேவைப்பட்டன. இதற்கிணங்க நாயன்மார்கள் இசையோடு கூடியப் பாடல்களைப்பாடி கோவில்கள் தோறும் இறைவனை வழிபட்டனர். 'ஏழிசையாய் இசைப்பயனாய் உள்ளவன்' என்றார் சுந்தரர். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று சம்பந்தர் போற்றப்பட்டார். 'தமிழோடு இசைப்பாடல் மறந்து அறியேன்' என்று திருநாவுக்கரசர் வாழ்ந்துள்ளார். சைவத் திருமுறைகளுள் இம்மூவரது பாடல்களும் தேவாரப் பாடல்கள் என்று பொதுப்பெயரல் அழைக்கப்படுகின்றன.

பண் சுமந்த பாடல்களைக் கொண்ட தேவாரத்தில் ஒலி இன்பமே முதலிடம் வகிக்கின்றது. எதுகை, மோனை, இயைபு அமைந்த பாடல்கள் கேட்பவரைப் பிணிக்கும் தகைமை உடையனவாய் உள்ளன. தலைவி கூற்றாகவும், செவிலி கூற்றாகவும், நற்றாய் கூற்றாகவும், பாங்கி கூற்றாகவும் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அறத்தொடு நிற்றல், தூது விடுதல், காமம்மிக்க கழிபடர் கிளவி, மனைமாட்சி, தாய் இரங்கல், பிரிவாற்றாமை போன்ற பல இலக்கியத் துறைகளைத் தேவாரத்தில் காணமுடிகிறது. இயற்கை பொருள்கள் எல்லாம் இறைவனே என்ற கொள்கையுடைய அடியார்களின் பாடல்களில் இயற்கை வருணனையும் மிகுதியாகக் உள்ளது. சுருங்கக்கூறின், சங்க இலக்கிய மரபினைத் தம் பக்தி இயக்கத்திற்குப் பொருந்துமாறு மாற்றி அமைத்துப் பாடிய இம்மூவரின் திறமும் வியக்கத்தக்கதாகும்.

**தமிழும் திருஞானசம்பந்தரும்**

தமிழையே உயிர்மூச்சாகக் கொண்டு உலகுய்யப் பல்வேறு இலக்கிய சுவை ததும்பும் பாக்களைப் பொழிந்தார் சம்பந்தர். தம்மை தமிழ் ஞானசம்பந்தன் என்று தமது தேவாரப் பதிகங்களில் ஏறத்தாழ நாற்பத்தைந்து இடங்களில் மிகவும் பெருமிதத்தோடு குறிப்பிட்டு மகிழ்கிந்துள்ளார். மேலும், 'தமிழ் விரகன்', 'அருந்தமிழ் ஞானசம்பந்தன்', 'முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன்', 'நல்ல செந்தமிழ் வல்லவன்' என்ற பெயர்களாலும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். இவரைப் போல தமிழ் மொழியை அடைமொழியாகத் தனக்கு வைத்துக் கொண்டவர் வேறு எவரும் இலர்.

சம்பந்தர் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள பணிகள் அளவிடற்கரியவை. எண்ணற்ற சந்த வேறுபாடுகளுடன் கூடிய திருப்பதிகங்களைத் தமிழில் மழையெனப் பொழிந்தார். சங்க காலத்திற்குப் பின்னர் தமிழ் மரபுக்கு ஏற்ப புதிய மரபுகளை தோற்றுவித்தும், பழைய மரபுக்கு புது உருவம் படைத்தும் தொண்டாற்றினார்.

> "தம் திருவாக்கைத் தமிழ் தமிழ் என்று கூறி இன்புறும் சம்பந்தர், நலங் கொள் தமிழ், பணி உலாம் அருந்தமிழ், பலந்தரு தமிழ்க் கிளவி, முடிவில் இன் தமிழ், வாய்மை பண்ணிய அருந்தமிழ், விலையுடை அருந்தமிழ் எனப் பல்வேறு அடைமொழிகள் முப்பத்தாறனுக்கும் மேலாக வழங்கித் தமிழைச் சிறப்பிக்கின்றார்" (சைவம் வளர்த்த தமிழ், ப. 21),

என்ற பானுமதி ரமேஷின் கருத்து ஏற்புடையதாக உள்ளது. யமகம், மடக்கு, சித்திரக்கவி, யாழ்முறி, மாலைமாற்று, திருவெழுக்ககூற்றிருக்கை முதலான பாடல்களில் நாட்டங்காட்டியவர் சம்பந்தர். இசைப்புலமையும், யாப்புவன்மையும், இறையருளும் ஒன்று வரப்பெற்ற இவரால் தமிழிலக்கியம்

மறுமலர்ச்சி அடைந்து மணம் பெற்றது.

**தமிழும் திருநாவுக்கரசரும்**

திருநாவுக்கரசர் 'தாண்டகம்' என்னும் புதிய யாப்பினைக் கையாண்டு வெற்றி பெற்றார். திரு அங்கமாலை என்னும் சீர்மிகு பாடலையும் தமிழுக்கு நல்கினார். வாழ்வில் நன்னெறியை ஊட்டி எமபயத்தை நீக்கி, இறைவனின் நிழலில் நம்மைச் சேர்க்கும் திறன் கொண்ட பாடல்களைப் புனைந்தார். அவரது நேரிசை, குறுந்தொகை மற்றும் விருத்தம் ஆகியனவும் தனித்த இலக்கணம் கொண்டவையே என்பது கவனிக்கத்தக்கது. சர்வ வல்லமை பொருந்திய மன்னரையும் எதிர்த்து நின்ற நாவுக்கரசருக்கு, தமிழ் மொழியானது இறைவனை அடைவதற்கான வழியாகத் தெரிந்திருக்கிறது.

> "சைவமும் தமிழும் தழைத்து இனிதே ஓங்கி வளர பன்னிரு திருமுறைகளில் முதல் ஆறு திருமுறைகளை அருளியவர்கள் திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் ஆவார். அவ்விரு அடியார்களையும் சேக்கிழார் 'புண்ணியக் கண் இரண்டு' என்றும் 'கன்றும் அரசும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்" (சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள், ப. 32),

என்று மு. கலைவேந்தன் கூறுவது இங்கு பொருத்தமாக உள்ளது.

**தமிழும் சுந்தரரும்**

திருஞானசம்பந்தருக்கு அடுத்த நிலையில் மிகுதியான பண்களைப் பாடியவர் சுந்தரர். சுந்தரரின் தமிழ் கேட்க இறைவன் அவருக்காகக் காதல் தூது போனதாகச் செய்தி இருக்கிறது. சேக்கிழார் தனது பெரியபுராணத்தில், இறைவன் சுந்தரரை ஆட்கொண்டு சிவநெறியைப் பரப்ப அவருக்கு ஆணையிட்டபோது, 'மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்று ஆணையிட்டதாக சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார். சுந்தரமூர்த்திகளின் பாடல்கள் அனைத்தும் உரையாடல் தொனியைக் கொண்டவை என்பதால் அவை நாடகத் தமிழுக்கு இலக்கானதாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

> **"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு**
> **தாளம் ஈந்தவன் பாடலுக்கு இரங்கும்**
> **தன்மை யாளனை என்மனக் கருத்தை"** **(ஏழாம் திரு. திருக்கோலக்கா பதி.8)**

என வரும் சுந்தரரின் பாடலில் 'தமிழ்' என்ற சொல் வெறுமனே மொழியை மட்டும் சுட்டுவதில்லை. மாறாகத் தமிழ்க்கலை, நெறி, பண்பாடு என அனைத்தையும் குறிப்பதாய் அமைந்துள்ளது. மேலும் இப்பாடலினூடாக நற்றமிழ், தண்தமிழ், அருந்தமிழ், ஒண்தமிழ், செந்தமிழ், வண்தமிழ், இன்தமிழ் முதலிய அமுதச் சொற்களைக் கையாண்டு அன்னைத் தமிழின் அருமை பெருமைகளையும் எடுத்துரைத்துள்ளார் சுந்தரர்.

**தமிழும் மாணிக்கவாசகரும்**

மாணிக்கவாசகரால் தமிழ் மொழி பெற்ற பெருமை எண்ணிலடங்கா. அவரால் சைவமும் தமிழும் தழைத்தோங்கின. பாவை பாடல்கள், பள்ளியெழுச்சிப் பாடல்கள், சதகம் ஆகியவற்றை முதன் முதலில் பாடியவர் மாணிக்கவாசகரே. இவரை பின்பற்றிய பலர் பிற்காலத்தே பாடினர். அந்தாதி

அமைப்பில் நீத்தல் விண்ணப்பம், திருச்சதகம் ஆகியன பாடித் தமிழை அணி செய்தார். இவற்றைத் தொடர்ந்து, அக ஒழுக்கத்தை நானூறு துறைகளாக வகுத்து, நானூறு செய்யுட்களில் முதன் முதலில் கோவை என்னும் பிரபந்தத்தையும் பாடித் தமிழுக்கு வளம் சேர்தார். மேலும், உருகாதவரையும் உருக வைக்கும் வண்ணம் திருவாசகம் பாடி, அந்நிய நாட்டவரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வைத்தார். திருத்தெள்ளேணம், திருப்பொற்சுண்ணம் போன்ற பாடல்களை நாட்டுப்புறப் பாடல் அமைப்பில் பாடித் தமிழில் ஓசை நயமும், இலக்கிய வளமும் சேர்த்து இனிமையைத் தேக்கினார்.

**"உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஓண்தீந்தமிழின்**
**துறைவாய் நுழைந்தனையோ"** **(திருக். பா. 20)**

என்ற பாடலில் மணிவாசகப் பெருமான் சங்கத் தமிழின் மாண்பினை விளக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழும் ஒன்பதாம் திருமுறையும்**

திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருஷோத்தமநம்பி, சேதிராயர் ஆகியோர் இயற்றிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலாய பாடல்கள் ஒன்பதாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் அருளிய பக்தி நலங்கனிந்த பதிகங்களைத் தமிழின் மேல் வரம்பாகக் கொண்ட சுந்தரரைப் போலவே, திருவிசைப்பா ஆசிரியருள் ஒருவராகிய சேந்தனாரும் கொண்டுள்ளார். பாசுரங்களையும் 'பழுத்த செந்தமிழ் மலர்' என்று தாம் பாடிய திருவீழிமிழலைத் திருவிசைப்பாவில் இவர் போற்றியுள்ளார்.

**"பூந்துருத்திக் காடன் தமிழ்மாலை பத்தும்"** **(திருவீழி.பதி.05.10)**
**"ஆரா இன்சொல் கண்டராதித்தன் தமிழ்மாலை"** **(திருவீழி.பதி.05.02)**

என்னும் அடிகள், தமிழைப் போற்றும் பாங்கில் தேவார மரபினை அடியொட்டி திருவிசைப்பா இயற்றப்பட்டுள்ள உண்மையினை உறுதிப்படுத்துகின்றன.

**தமிழும் திருமூலரும்**

திருமந்திரத்தை நமக்கு அளித்த திருமூலர்,

**"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே"** **(திருமந்திரம் - 81)**

என்று தான் பிறந்ததன் நோக்கத்தை நமக்கெல்லாம் நயமுடன் விளக்குகின்றார். தமிழ் வேதாகம முழு முதல் கருவூலமாக திகழ்வது திருமந்திரமாகும். இதனை முதல் நூலாகக் கொண்டே பதினொரு திருமுறைகளும், சித்தாந்த நூல்களும் எழுந்தன என்பர். 'சித்தாந்தம்' என்ற தொடரை முதன் முதலில் வழங்கியது இந்நூலே. தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற வகைப்பகுப்பும் அமைந்த ஒரே செந்தமிழ் நூல் இதுதான். இந்நூல் சமய உண்மைகளையும், உலகியல் ஒழுக்கங்களையும் பறைசாற்றுகின்றது. திருக்கோயில் வழிபாடுகளையும், திருவுருவச் சிறப்புகளையும் செப்புகிறது. மந்திர மாண்பையும், சக்கர

அமைப்பையும், அடியார் பெருமையையும் அழகுடன் எடுத்தோதுகிறது.

திருமந்திரம் யாப்பு வகையிலும் தனித்தன்மை வாய்ந்தது. நாற் சீரடி நான்கு கொண்ட கலிப்பா வகையில் வெண்டளை பிழையாது அடிதோறும் பதினொன்று அல்லது பன்னிரண்டு எழுத்துக்கொண்ட திருமந்திர யாப்பு, நம் நெஞ்சங்களையெல்லாம் பிணிக்கும் பெருமை வாய்ந்ததாக உள்ளது. மேலும், இந்நூல் தெய்வ நூலாக மட்டுமின்றி நீதி நூலாகவும் விளங்குவது சிந்திக்கத்தக்கது.

**தமிழும் பதினோராம் திருமுறையும்**

'செந்தமிழ் பிரபந்தமாலை' எனப் போற்றப்படும் பதினோராம் திருமுறையில் காரைக்கால் அம்மையார், கபில தேவர், பரண தேவர் உள்ளிட்ட பன்னிருவர் பாடிய நாற்பது சிறு நூற்களின் தொகுதி அடங்கியுள்ளது. இத்திருமுறையில் செந்தமிழ் பற்றியச் சிறந்த கருத்துக்களைக் காணமுடிகின்றது. தமிழ் கடித இலக்கியத்திற்கு முன்னோடியாகத் திகழும் திருவால வாயுடையாரின் திருமுகப் பாசுரம் இங்கு முதலாவதாக இடம் பெற்றுள்ளது. இவற்றைத் தொடர்ந்து காரைக்கால் அம்மையாரின் நூல்கள் அணிசேர்கின்றன.

தமிழ் இலக்கிய உலகில் முதன் முதலில் பதிகம், அந்தாதி மற்றும் இரட்டை மணிமாலை ஆகியவற்றை அறிமுகம் செய்த சிறப்புக்குரியவர் காரைக்கால் அம்மையார் ஆவார். இவர் அருளிச்செய்த திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில்,

**"செப்பிய செந்தமிழ் பத்தும் வள்ளலார்" (திருவா. மூத்த திருப்.11)**

என்ற தொடர் தமிழின் பெருமையை எடுத்துரைக்கும் நோக்கில் அமைந்துள்ளது. தொடர்ந்து, முதல் அந்தாதி நூலான அற்புதத் திருவந்தாதியில் காரைக்கால் அம்மையாரின் சிவ அனுபவதின் வெளிப்படுகளையும், சிவ ஞானத்தின் இயல்புகளையும் தெளிவாக உய்த்துணர முடிகிறது.

> "அண்ணல் என்னும் சொல் பெருமையுடையவரைக் குறிக்கும் சொல்லாக தற்காலத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அற்புதத் திருவந்தாதியில் அண்ணல் என்னும் சொல் சிவனை குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அற்புதத் திருவந்தாதி காலத்தில் சிவனை குறிப்பிடுவதற்குப் பயன்பட்ட சொல், தற்காலத்தில் மனிதரில் சிறந்தவரைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது" (சைவம் வளர்த்த தமிழ், ப.163)

என்னும் முனைவர் முகிலை இராச பாண்டியனின் கருத்து, தமிழ் மொழியானது மக்களிடம் சென்றடைந்த பாங்கினையும், அது இலக்கிய உலகில் பெற்றிருக்கக் கூடிய இடத்தினையும் தெள்ளிதின் புலப்படுத்துவதாய் உள்ளது.

தமிழின் முதல் உலாவான திருக்கைலாய ஞான உலாவை இயற்றியவரும் இத்திருமுறையைச் சேர்ந்த சேரமான் பெருமாள் நாயனார் என்பது கவனிக்கத்தக்கது. மேலும், பதினோராம் திருமுறையைச் சேர்ந்த பட்டினத்து பிள்ளையாரின் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமலம் மும்மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணி கோவை, திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது ஆகியவையும் தமிழுக்கு வளம் சேர்ப்பனவாக அமைந்துள்ளன.

**தமிழும் பெரியபுராணமும்**

தமிழின் முதல் கள ஆய்வு நூல் மற்றும் தமிழின் இரண்டாவது தேசியக் காப்பியம் என்ற சிறப்புக்குரியது சேக்கிழாரின் பெரியபுராணம். பெரும்பாலும் காப்பியங்கள் யாவும் வடமொழியை தழுவி எழுதப்பட்டிருக்க, பெரிய புராணத்தை தழுவி இரு வடமொழி நூல்கள் இயற்றப்பட்டிருப்பது தமிழுக்கு கிடைத்த தனிப் பெரும் தொகையாகும். 'அகஸ்திய பக்த விலாசம்', 'உபமன்யு பக்த விலாசம்' ஆகிய இரு வடமொழி நூல்கள் பெரிய புராணத்தை தழுவியே எழுதப்பட்டன. பெரியோர் வரலாற்றை கூறுவதாலும், ஓதுவோருக்குப் பேசரிய பெருமை சேர்ப்பதாலும், பிறவா யாக்கைப் பெரியோன் பெருமையை விவரிப்பதாலும், அப்பெரியோன் அடியார்க்கு எளியவனாக எழுந்தருளிய அருமையை விளக்குவதாலும், முன்னும் பின்னும் இதனை ஒத்த பெருநூல் தோன்றாமையாளும், பெரிய புராணம் மிகப்பெரிய புராணமாய், காப்பியமாய், மறைநூலாய் போற்றப்படும் பெருமையைப் பெற்றுவிட்டது. இந்நூலில் குறிப்பிடப்பட்ட சம்பவங்களின் அடிப்படையில்தான் தமிழக வரலாற்றுச் சம்பவங்களின் காலங்கள் கணிக்கப்பட்டுள்ளன எனும்போது, பெரிய புராணம் தமிழ் இலக்கியத்திற்கு தந்த பங்களிப்பு சாதாரணமானதல்ல என்று புலப்படுகிறது. அமங்கலச் சொற்களே பயிலாமல் ஒரு காப்பியத்தை இயற்ற முடியும் என்பதற்கு பெரிய புராணம் தக்க சான்றாகும்.

இறைவனே 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுக்க சேக்கிழார் பாடினார் என்பது சைவப் பெருமக்களின் நம்பிக்கை. இவர் தமிழைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**"ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழாம்" (பெரியபுராணம் - 4.1.975)**

எனப் பாடுகிறார். பக்தி நனிசொட்டச் சொட்டப் பாடித் 'தொண்டர் சீர் பரவுவார்' என்று போற்றப்பெற்ற சேக்கிழார், தமிழின் இனிமையை உலகிற்கு பரப்பியதன் மூலம் 'செந்தமிழ்ச் சீர் பரவுவார்' என்றப் பாராட்டையும் பெற்றார்.

**"திருமுறை ஆசிரியர்கள் இறையருள் பெற்றவர்கள். தமிழின் செம்மை நலமும், இசைப் பண்புகளும் உணர்ந்து தெளிந்தவர்கள். அதனால்தான் அருளாளர்கள் பலரும் தமிழை அடைகொடுத்துப் போற்றிப் பாடியுள்ளனர்" (அறிவோமா தொன்மைத் தமிழை? - கட்டுரை)**

என்ற இராமாநுசம் அவர்களது கூற்று இங்கு ஏற்புடையதாக உள்ளது. அருளாளர்களின் ஆன்மீகப் பற்றுக்கு துணையாகத் தமிழ் மொழியில் 'இறைவனைப் பாடுதல் தகும்' என்பதை அறிவதற்குத் திருமுறைகள் சான்று பகர்கின்றன. திருமுறையாளர்களின் இறைநெறி சார்ந்த செந்தமிழ்ப் பற்றையும் பிற மொழிகளை ஒப்பு மதிக்கும் பண்பையும் திருமுறைப் பதிகங்களின் மூலம் நன்கு உணர முடிகிறது.

**சாத்திரங்கள் வளர்த்த தமிழ்**

சைவநெறியின் அடிப்படைத் தத்துவம் 'சைவ சித்தாந்தம்' ஆகும். மற்றை எல்லா மதங்களுக்கான தத்துவங்களும் சமய நூல்களும் வடமொழியிலேயே அமைந்திருக்க, சித்தாந்தத்தின் அடிப்படை நூல்களான பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் தமிழிலேயே அமைந்திருப்பது சித்தாந்தத்தின் சிறப்பம்சமாகும். சொல்லால், பொருளால், சொல்லும் முறையால், சைவத்தையும், தமிழையும் வளர்த்தன இச்சாத்திரங்கள். இவை அறிவை அடிப்படையாகக் கொண்டவை. அருள்

நூல்களாகிய திருமுறைகளில் காணப்படும் அனுபவப் பயன்களுக்கு மரபு உணர்த்துபவை.

தமிழ் மொழியில் உள்ள தத்துவ நூல்களில் தலை சிறந்ததாகவும் சைவ சித்தாந்தத்தின் தலைமணி நூலாகவும் திகழும் பெருமை பெற்ற நூல் சிவஞானபோதமாகும். உலகப் பொதுமறையாகிய திருக்குறள் புகழுக்குரிய நூலாக திகழ்வது போல, சிவஞானபோதமும் உலகப் புகழ் பெறுவதற்குரியதாகும். திருக்குறள் சுருக்கமான நூல். சிவஞானபோதம் அதைவிட சுருக்கமானது. சுருங்கியதாக இருப்பினும் பொருளாள் பரந்து விரிந்து நிற்பது சிவஞானபோதமாகும். இந்நூலைப் போலவே சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதிமூன்றும் பொதுவாகத் திருக்குறளின் கருத்துக்களைத் தழுவியுள்ளன.

> **“சைவத் திருமுறைகளால் தெளிந்துணரப்பெற்ற தத்துவ உண்மைகளை விரித்துறைக்கும் செந்தமிழ் நூல்களே இப்பதினான்கு நூல்கள் என்பது க. வெள்ளைவாராணார் முடிந்த முடிவாகும்” (சைவ சித்தாந்த வரலாறு – அணிந்துரை),**

என முனைவர் இ. சுந்தரமூர்த்தி, சைவ சித்தாந்த வரலாறு என்னும் நூலுக்கான தனது அணிந்துரையில் இக்கருத்தைப் பதிவு செய்கிறார்.

**புலவர்கள் வளர்த்த தமிழ்**

சமயக் குரவர்கள், சந்தானக் குரவர்கள், தத்துவஞானிகள் ஆகியோர் தோன்றிய அருஞ் சைவ சமயம், எழில் மிக்க இலக்கிய மணிகளாய்ப் புலவர் பலரையும், கவிஞர்களையும் பெற்றெடுத்து இறவாப் புகழுடன் விளங்குகின்றது. அவர்களுள் குமரகுருபரர், சிவபிரகாசர், திரிகூட ராசப்பக் கவிராயர் ஆகியோரின் தமிழ் தொண்டு அளப்பரியது.

**தமிழும் குமரகுருபரரும்**

மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், காசிக்கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, இரட்டை மணிமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, பண்டார மும்மணிக்கோவை முதலிய இலக்கிய செல்வங்களைத் தமிழுக்கு அளித்தவர் குமரகுருபரர். இவர் இயற்றிய மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழும், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழும் பெருஞ்சிறப்பு வாய்ந்தவை. 'தொடுக்கும் கடவுள்' எனத் தொடங்கும் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழின் பாடல் தெய்வத்தன்மையும் இலக்கிய நயமும் பொருந்தியதாகும்.

‘தமிழ்’ என்னும் சொல் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில் பல இடங்களில் ஆளப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. தமிழ் மொழியை குறிப்பிடும்போதெல்லாம் அதன் சிறப்பு வெளிப்படுமாறு,

"தேக்கமழ் மதுரடம் ஒழுகியதமிழ்"

"மதுரத்து உவட்டெழு முத்தமிழ்"

"தெள்ளித் தெளிக்கும் தமிழ் கடல்"

"தென்னந்தமிழ்"

எனப் போற்றப் பெற்றுள்ளது. சைவ சமயத்தைச் சார்ந்த பிள்ளைத்தமிழ் இலக்கியங்களின் சிறப்பைப்

பற்றி கா. பாலதண்டாயுதம் கூறுகையில்,

> "தமிழ் மொழியை குறிப்பிடும் போதெல்லாம் வெறுமனே தமிழ் மொழி என்று குறிப்பிடாமல் அதன் இயல்பு, சிறப்பு முதலிய அடைகளோடு தமிழ் மொழியின் ஆளுமையைச் சிறப்பித்திருக்கின்ற தன்மையையும் சைவ சமயப் பிள்ளைத்தமிழ் நூல்களின் வழி அறிய முடிகிறது" (சைவம் வளர்த்த தமிழ், ப.74),

என்று தமிழ் வளர்ச்சியில் சைவசமய பிள்ளைத்தமிழ் இலக்கியங்களின் பங்களிப்பை எடுத்துறைக்கிறார்.

**தமிழும் சிவபிரகாசமும்**

'கற்பனைக் களஞ்சியம்' என்று போற்றப்படும் வீர சைவ சமயத்தை சார்ந்த சிவப்பிரகாச சுவாமிகள், நீரோட்டக யமக அந்தாதி, நால்வர் நான்மணிமாலை, பிரபுலிங்க லீலை, நன்னெறி, மந்திரிக் கோவை, திருவெங்கைக் கோவை, திருவெண்காட்டு புராணம், திருவிரிஞ்சைப் புராணம், சௌந்தர்ய லஹரி- உரை ஆகியவற்றை செந்தமிழுக்கு அளித்துள்ளார். இதழ்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தாமல் பாடக்கூடிய நீரோட்டக யமக அந்தாதியை தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகம் செய்த பெருமைக்குரியவர் சிவப்பிரகாசர்.

**தமிழும் திரிகூட ராசப்பக் கவிராயரும்**

குறவஞ்சி நூல்களிலே தலையாயதாக எண்ணப்படும் திருக்குற்றால குறவஞ்சி சிவப்பிரகாசர் இயற்றியதாகும். திருக்குற்றால நாதராம் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாய் கொண்ட இந்நூலின் சொல் நயம், பொருள் நயம், இசை நயம், கற்பனை வளம் அனைத்தும் எவர் உள்ளத்தையும் ஈர்க்கும் தன்மை கொண்டவை. இதனை இயற்றிய புலவருக்குச் சொற்கள் ஏவல் செய்யும் என்பர்.

**சைவ சான்றோரின் செந்தமிழ் தொண்டு**

சைவ சான்றோர்களான மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர், கா.சு. பிள்ளை, மறைமலை அடிகள், தமிழ் தென்றல் திரு.வி.க. போன்றோர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றியுள்ளனர்.

**தமிழும் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும்**

மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பலராலும் பாராட்டப்படுவதாகும். மேலும், இவர் பதினாறு தல புராணங்களும், பத்து பிள்ளைத்தமிழ் நூல்களும், நான்கு மாலைகளும், பதினாறு அந்தாதிகளும் பாடியுள்ளார். இவரைப் போன்று எண்ணிறந்த பாடல்களைத் தமிழில் எழுதியவர் வேறு இலர் எனலாம்.

**தமிழும் ஆறுமுக நாவலரும்**

ஆறுமுக நாவலர் 'சைவமும் தமிழும் தம்மிரு கண்கள்' எனக் கொண்டவராவார். இவர் இவ்விஇரண்டினையும் வளர்க்க யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் கல்லூரிகளை நிறுவினார். சைவத்திற்குப் புத்துயிர் அளித்தார். சென்னையில் ஒரு அச்சகக் கூடத்தினையும் நிறுவி இலக்கண

நூல்களையும், சைவ சமய நூல்களையும் திருத்தமாகப் பதிப்பித்தார்.

**தமிழும் சி.வை. தாமோதரன் பிள்ளையும்**

சைவ சமய பற்று நிறைந்த இவர், அதுநாள் வரை அச்சேறாமல் பனையோலையில் தவம் கிடந்த ஓலைச்சுவடிகளை எல்லாம் சேகரித்து பரிசோதிக்கத் தொடங்கினார். தொல்காப்பியம், நச்சினார்கினியம், சேனாவரையம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள் உரை, இலக்கண விளக்க உரை முதலிய இலக்கண நூல்களையும்; கலித்தொகை, தணிகைபுராணம், சூளாமணி முதலிய இலக்கிய நூல்களையும் பதிப்பித்தார். தாமாகவே சில நூல்களையும் எழுதியுள்ளார். 'இவர் புகழ் பாட்டில் அடங்காது' என குமாரசாமி புலவர் இவரை பாராட்டி உள்ளது மிகவும் பொருத்தமே.

**தமிழும் டாக்டர் உ.வே.சாமிநாதையரும்**

மகாவித்வான் மீனாட்சிசுந்தரத்தின் மாணவரான உ.வே. சாமிநாதய்யர், 'தமிழ் தாத்தா' என பாசத்துடன் தமிழ் மக்களால் அழைக்கப்படும் பெருமை மிக்கவராவார். இவர் ஊர் ஊராகச் சென்று கரையானுக்கு இரையாகிக் கொண்டிருந்த ஓலைச்சுவடிகளை எல்லாம் திரட்டி வந்து அவைகளை திருத்தமான முறையில் பதிப்பித்தார். இவர் பதிப்பித்த நூல்களால் தமிழும் வளர்ந்தது சைவமும் உயர்ந்தது.

**தமிழும் கா.சு. பிள்ளையும்**

சைவப்பற்று நிரம்பிய இவர் நாயன்மார் வரலாற்றினை எழுதியுள்ளார். 'இலக்கிய வரலாறு' என்னும் இவரது நூல் என்றென்றும் இவர்தன் பெருமையை பறைசாற்றும்.

**தமிழும் மறைமலையடிகளும்**

மறைமலையடிகள் முதன் முதலில் சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்பினார். வடமொழி கலப்பற்ற தூய தனித்தமிழ் இயக்கத்தினைத் தோற்றுவித்தார். மேனாட்டுக்கு உரிய முற்போக்கு கருத்துக்களையும் ஆராய்ச்சி முறைகளையும் தமிழில் புகுத்தினார். சைவ சமய பெரியாரான இவர், பண்டைத் தமிழரும் ஆரியரும், தமிழர் மதம், முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை, திருக்குறள் ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி, மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் போன்ற பல நூல்களை தமிழுக்கு அளித்தார். இவரது தமிழ்த் தொண்டைப் பற்றி பி. தயாளன் குறிப்பிடுகையில்,

> "தமிழ் மொழியின் தொன்மையினைச் சான்றுகளுடன் நிலை நிறுத்தியவர்; தமிழ் இலக்கியங்களின் பண்பாட்டு மேன்மையைப் புலப்படுத்தியவர்; தமிழ் இலக்கணத்தின் தனித்திறத்தை விளக்கிக் காட்டியவர்; பிறமொழி ஆதிக்கச் சூறாவளியில் சிக்கித் தவித்த தமிழ் மக்கள், தாய்மொழித் துறையின் கரை அடைவதற்குச் சேரவேண்டிய திசையினை உணர்த்தியவர்; தனித்தமிழ் இயக்கம் கண்டவர்; தமிழகத்தின் கலங்கரை விளக்கமாக ஒளிர்ந்தவர் அவர் தான் மறைமலையடிகள்" (தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகள் – கட்டுரை),

என மறைமலையடிகளாரின் பெருமையைப் பறை சாற்றுகிறார்.

**தமிழும் தமிழ் தென்றல் திரு.வி.க. வும்**

திரு.வி.க. என்ற பெயர் தமிழ் நெஞ்சங்களில் வாழும் பெயர். இவருடைய எழுதுகோல் எல்லா துறையிலும் தொண்டு செய்தது. முருகன் அல்லது அழகு, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, இமயமலை அல்லது தியானம், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கை விளக்கம், சைவத்திறவு, சைவத்தின் சமரசம், நாயன்மார் வரலாறு ஆகியன தமிழுக்கும் சைவத்திற்கும் திரு.வி.க. அளித்த கொடைகளாம்.

**சைவ மடங்கள் வளர்த்த தமிழ்**

தமிழ் வளர்த்த திருமுறைகளைப் பேணிக் காப்பதிலும், அதன் வழியே தமிழை வளர்ப்பதிலும் சைவ மடங்கள் அல்லது ஆதீனங்கள் பெரும் பங்காற்றியுள்ளன. பழைய நூல்களின் அரணாயும், புதிய நூல்களின் பிறப்பிடமாயும் அவை அமைந்திருந்தன. இந்த மடங்களின் தலைவர்கள் பலர், தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்து புலமை நிரம்பியவர்களாக விளங்கினர். திருவாவடுதுறை மடம், தருமபுர மடம், திருப்பனந்தாள் மடம், மதுரை மடம், வீரசைவ மடங்கள், திருவண்ணாமலை மடம் ஆகிய மடங்களிலெல்லாம் கல்லூரிகளை நிறுவித் தமிழ் கற்பித்தனர் சான்றோர்கள். இதனால்தான் இலக்கிய இலக்கண நூல்கள் மக்களிடையே வாழ்ந்து வந்தன. தருமபுர ஆதீனத்தின் கொள்கை வாசகமே 'சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக' என்பதுதான். அதற்கேற்ப தெய்வீகத் தமிழ் வளர்ப்பதில் ஆதீனங்களும் பெரும் அக்கறை காட்டின.

> "சைவம் மட்டுமின்றி தமிழும் தழைத்தோங்க மடங்களும் ஆதீனங்களும் பெரிதும் பாடுபட்டன. புராணங்கள் பதினெட்டு, சித்தர்கள் பதினெட்டு போன்று சைவ ஆதீனங்கள் பதினெட்டு உண்டு. 'சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள்' என்று கூறுவார்கள். பதினேழு ஆதீனங்கள் (மடம்) தமிழ்நாட்டிலும், ஒரு ஆதீனம் 'வரணி ஆதீனம்' எனும் பெயரில் இலங்கை யாழ்ப்பாணத்திலும் உள்ளன" (அபிஷேக பரம்பரை எனும் ஆதீன குரு பரம்பரை – கட்டுரை),

என்ற முனைவர் இரா. இராஜசேகரனின் கூற்று பொருத்தமாக உள்ளது. சைவ சித்தாந்தத்தை வளர்க்கும் நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்ட மடாலயங்கள் தமிழ் மொழியையும் வளர்த்தெடுத்த பாங்கு சைவர்களின் தமிழ் பற்றைத் தெள்ளிதின் புலப்படுத்துகின்றது.

**முடிவுரை**

சைவமும் தமிழும் ஒன்றை ஒன்று பிரிக்க இயலாத பொருள்களாய் அன்று முதல் இன்று வரை நிலவி வருகின்றன. சைவத்தின் தலைவன் சிவபெருமானால் விரும்பி போற்றப்படும் மொழி தமிழே என்றும் கூறுவர். தமிழ் சைவத்தால் தெய்வ மணம் பெற்றது. சைவம் தமிழால் இலக்கியச் சுவை உற்றது. தோத்திரப் பாடல்கள் தமிழை துதித்தன. சாத்திர நூல்கள் தமிழை வளர்த்தன. சைவ இலக்கியங்கள் தமிழ் இலக்கியத் தேனைப் பிழிந்து தந்தன. தத்துவ ஞானியரும் முத்தமிழில் வல்லவராய் முத்தாய கவிகள் பாடினர். கடவுளைப் பாடிய கவிஞர்கள் கன்னித்தமிழையும் தெய்வமாய் போற்றினர். சைவ மடங்களும் செந்தமிழை செழுந்தமிழாக்கின. தமிழ் வாழத் தாங்கள் வாழ்ந்த சான்றோர் பலர். சைவ இலக்கியங்கள் பிற்கால கவிதைகளுக்கு வழிகாட்டின. மக்கள் மனதில் உடனே

இடம்பிடிக்கும் திரைப்பாடல்களுக்கும் தேனான வரிகளை வரியின்றித் தந்தன. வாழையடி வாழையென இன்னும் தமிழ்த் தொண்டு புரியும் சைவப் பெரியோர் பலர் உள்ளனர். சைவ சமயம் சார்ந்த இலக்கியங்கள் இன்றும் எழுகின்றன. சைவத்தின் பெருமை அனைவரும் அறியப் பல விழாக்களும் நடைபெறுகின்றன. ஆனாலும் அன்று செங்கோலோச்சிய சைவத்தையும் தமிழையும் இன்று அவற்றின் பழஞ்சிறப்போடு பார்க்க இயலவில்லை என்பது நிதர்சனமான உண்மை.

**சான்றாதாரங்கள்**

[1] இராச பாண்டியன், முகிலை, அற்புத திருவந்தாதியில் பொருண்மை மாற்றம் - கட்டுரை, சைவம் வளர்த்த தமிழ் தொகுதி - 1, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு - 2017.

[2] கலைவேந்தன், மு., சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள், தமிழ் ஐயா வெளியீட்டகம், தஞ்சாவூர், முதற்திப்பு 2012.

[3] சுந்தரமூர்த்தி, இ., சைவ சித்தாந்த வரலாறு - அணிந்துரை, ராமையா பதிப்பகம் சென்னை மூன்றாம் பதிப்பு - 2022.

[4] சுப்ரமணியம், ச. வே., ( பதிப்பாசிரியர்) பன்னிரு திருமுறை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு – 2013.

[5] பாலதண்டாயுதம், க., சைவ சமய பிள்ளைத்தமிழ் நூல்களின் வழி அறியலாகும் தமிழ் மொழியின் ஆளுமை - கட்டுரை, சைவம் வளர்த்த தமிழ் தொகுதி - 1, மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம், முதற்பதிப்பு - 2007.

[6] பாரதி ரமேஷ், சைவம் வளர்த்த தமிழ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு - 2011.

**இணையவழிக் கட்டுரைகள்**

[1] இராஜ சேகர், இரா., அபிஷேக பரம்பரை எனும் ஆதீன குரு பரம்பரை – கட்டுரை, https://www.nakkheeran.com

[2] இராமாநுசம், அறிவோமா தொன்மைத் தமிழை? – கட்டுரை, isainirai.blogspot.in

[3] தயாளன், பி., தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகள் – கட்டுரை, https://keetru.com